9 செப 2008

## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – உடனடித் தேர்வில் S.S.L.C. தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு இந்தக் கல்வி ஆண்டிலேயே பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்ந்து கல்வியை தொடர வாய்ப்பளித்து ஆணை – வெளியிடப்படுகிறது.

உயர் கல்வி (பி2) துறை

அரசாணை (நிலை) எண்.360

நாள்: 5.9.2008.
ஆவணி 20, திருவள்ளுவராண்டு 2039

36232

படிக்கப்பட்டவை :

தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.14077/ஐ.1/2008, நாள் 10.7.2008.

ஆணை:

மாணவர்களின் நலன் கருதி பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு அரசு தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு உடனடி தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டு, அரசு தேர்வு இயக்ககத்தினால் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. உடனடி தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களின் நலன் கருதி ஒரு வருட கல்வி ஆண்டு வீணாகமல் இருக்க வேண்டுமென்று கருதியே இவ்வரசு இந்த உடனடி தேர்வு திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. உடனடி தேர்வில் S.S.L.C. அதாவது 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அந்தந்த ஆண்டிலேயே பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்ந்து கல்வியை தொடர வாய்ப்பளிக்க வேண்டி மாணவர்களிடமிருந்து அரசுக்கு அதிக கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகள் அதிக அளவில், மாணவர்களின் தேவைக்கேற்ப அவர்களின் நலன் கருதியும் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்து வருகிறது. சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளிலிருந்தும் உடனடி தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அந்தந்த கல்வியாண்டிலேயே பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு அரசு அனுமதி வழங்கிடுமாறும் அரசிற்கு கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

2. உடனடி தேர்வில் தேர்வு பெற்ற மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு கவனமுடன் பரிசீலித்த அரசு, பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் உள்ள காலியிடங்களை கருத்தில் கொண்டும் மாணவர்களின் நலன் கருதி உடனடி தேர்வு நடத்துவதின் நோக்கத்தினையும் கருத்தில் கொண்டும், உடனடி தேர்வில் தேர்ச்சி பெற்று தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு வருகை நாட்களில் முதல் பருவத்திற்கு விதிவிலக்கு அளிக்காமல் விடுமுறை நாட்களையும் சேர்த்து வகுப்புகள் நடத்த முடிந்தால் மாணவர்கள் சேர்க்கைக்கு அனுமதி வழங்கி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

3. தொழில்நுட்பக் கல்வி ஆணையர் இது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்,சென்னை–25.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை,சென்னை–6
அரசு தேர்வு இயக்ககம், சென்னை–25,

நகல்
செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர். 5/9/08